திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2018 ஆம் ஆண்டு ஜூலை ன் மாதம் 12ஆம் நாள், செவ்வாய் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**<u>நிகழ்ச்சி நிரல்</u>**

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியானது 65 வார்டுகளை உள்ளடக்கிய நகரமாகும். இம்மாநகராட்சியானது 167.27 சதுர கி.மீ பரப்பளவு கொண்டது. 2001 கணக்கெடுப்பின் படி சுமார் 761428 மக்கள் தொகை கொண்டது. இம்மாநகராட்சியில் நவீன பேருந்து நிழற்குடை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் திருச்சி மாநகர் - சீர்மிகு நகரமாக (Smart City) தேர்வு செய்யப்பட்டுள்ளதின் பேரில் இத்திட்டத்தின் கீழ் 19 வார்டு பகுதிகளில் (ABD Areas) நவீன பயணியர் நிழற்குடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அதன்படி ABD பகுதிகளில் 52 இடங்களில் நவீன பயணியர் நிழற்குடை ( Modern Bus Shelter) 6 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு தனியார் நிறுவனங்கள் மூலம் கட்டப்பட்டு, அந்நிறுவனங்களின் மூலமாக பராமரிக்கப்பட்டு (PPP), கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது, அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | தொகுப்பு எண். | பணிகள் | உத்தேச மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 1 | வார்டு எண்.9க்குட்பட்ட கரூர் பைபாஸ் ரோடு அருகில் தாஜ் திருமணமண்டபம் (எதிர்புறம்), கரூர் பைபாஸ் ரோடு IOB அருகில், சிந்தாமணி SVR ஹோட்டல் அருகில், சிந்தாமணி மருத்துவமனை அருகில், சிந்தாமணி சத்திரம் பேருந்து நிலையம் சமயபுரம் பேருந்து நிறுத்தம் அருகில், வார்டு எண்.10க்குட்பட்ட கல்லூரி சாலை லூா்து மாதா ஆலயம் அருகில், பாபா மெடிக்கல்ஸ் அருகில், ராஜேஸ்வரி பேக்கரி அருகில், சிட்டி யூனியன் பாங்க் அருகில் ஆக மொத்தம் 9 இடங்களில் புதிதாக நவீன பயணியர் நிழற்குடை அமைத்தல். | 132.00 |
| 2 | 2 | வார்டு எண்.12க்குட்பட்ட மதுரை ரோடு ராஜா தியேட்டர் அருகில், மதுரை ரோடு சோபீஸ் கார்னர் அருகில், வார்டு எண்.12க்குட்பட்ட W.B ரோடு, W.B ரோடு பிஷப் ஹீபர் பள்ளி அருகில், W.B ரோடு III, W.B ரோடு V, வார்டு எண்.21க்குட்பட்ட தஞ்சாவூர் ரோடு இளங்கண் மாரியம்மன் கோவில் அருகில், EB ரோடு மகாராணி தியேட்டர் அருகில் ஆக மொத்தம் 9 இடங்களில் புதிதாக நவீன பயணியர் நிழற்குடை அமைத்தல். | 132.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 3 | வார்டு எண்.17க்குட்பட்ட W.B ரோடு கல்யாணி கவரிங் அருகில், வார்டு எண்.18க்குட்பட்ட W.B ரோடு மரக்கடை பேருந்து நிறுத்தம் அருகில், வார்டு எண்.19க்குட்பட்ட வெல்லமண்டி சாலை அருகில், மதுரை ரோடு ஸ்டார் தியேட்டர் அருகில், வெங்காயமண்டி ரோடு வளைவு, தஞ்சாவூர் ரோடு ஆனந்தா டிரேடர்ஸ் அருகில், வார்டு எண்.50க்குட்பட்ட சான்ஸ் ஹோட்டல் அருகில், மந்தை அருகில், சான்ஸ் ஹோட்டல் எதிரில் ஆக மொத்தம் 9 இடங்களில் புதிதாக நவீன பயணியர் நிழற்குடை அமைத்தல். | 132.00 |
| 4 | 4 | வார்டு எண்.51க்குட்பட்ட தென்னூர் பாத்திமா பள்ளி அருகில், 4 ரோடு அருகில், வார்டு எண்.52க்குட்பட்ட புத்தூர் கனரா வங்கி அருகில், புத்தூர் கனரா வங்கி எதிரில், புத்தூர் சிந்தாமணி எதிரில், புத்தூர் மதுரம் ஆஸ்பத்திரி அருகில், மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை அருகில், மதுரம் ஆஸ்பத்திரி எதிரில், கொரத்தெரு (எதிரில்) ஆக மொத்தம் 9 இடங்களில் புதிதாக நவீன பயணியர் நிழற்குடை அமைத்தல். | 132.00 |
| 5 | 5 | வார்டு எண்.54க்குட்பட்ட அருணா தியேட்டர் அருகில், கொரத்தெரு ஜங்ஷன் (வடக்கு), ஆர்.ஆர்.டீ ஸ்டால் அருகில், புத்தூர் அக்ரஹாரம் எதிரில், வார்டு எண்.56க்குட்பட்ட தில்லைநகர் மக்கள் மன்றம் அருகில், தில்லைநகர் 11வது குறுக்குத் தெரு மேற்கு பகுதி, தில்லைநகர் 7வது குறுக்குத் தெரு(கிழக்கு), சாலைரோடு லெஷ்மி ஜீவல்லரி அருகில் மற்றும் தில்லைநகர் முதலாவது குறுக்கு தெரு (மேற்கு) ஆக மொத்தம் 9 இடங்களில் புதிதாக நவீன பயணியர் நிழற்குடை அமைத்தல். | 132.00 |
| 6 | 6 | வார்டு எண்.56க்குட்பட்ட தில்லைநகர் 10வது குறுக்கு தெரு (பெட்ரோல் பங்க்), வார்டு எண்.57க்குட்பட்ட சாலை ரோடு எதிரில் லெஷ்மி ஜீவல்லரி, அண்ணாமலை நகர் அருகில் மலர் ரோடு, ஜெயந்தி ஹோட்டல் அருகில், ஜெயந்தி ஹோட்டல் எதிரில், ருக்மணி தியேட்டர் அருகில், ருக்மணி தியேட்டர் எதிரில் ஆக மொத்தம் 7 இடங்களில் புதிதாக நவீன பயணியர் நிழற்குடை அமைத்தல். | 106.80 |

மேற்கண்ட அட்டவணையில் விவரப்படி 52 இடங்களில் புதிதாக நவீன பயணியர் நிழற்குடை அமைக்க 6 தொகுப்புகளுடன் கூடிய விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இதனை இத்துறையில் அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனங்கள் மூலம் PPP முறையில் பராமரிப்பு செய்வதற்கு, நிர்வாக அனுமதி கோரி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மேற்கண்ட விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட திட்ட பணிகளுக்கு ஆகும் செலவினத்தை தனியார் பங்களிப்பு (PPP) முறையில் பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. 52 இடங்களில் அமைக்கப்படவுள்ள நவீன பயணியற் நிழற்குடைகளின் கட்டுமான பணிகளை இத்துறையில் அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனங்கள் (PPP) ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளஅனுமதி அளிக்கலாம்.

**இ7/5384/2018(மை)**

**தீர்மானம் எண்.193 (பொருள்—1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 62க்குட்பட்ட பாப்பாக்குறிச்சி, கீதாபுரம், நெய்குணம் ஆகிய பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் அதிகளவு மக்கள் வசித்து வருகின்றனர். தங்களது குடும்பங்களில் நடைபெறும் விழாக்களுக்கு குறைவான தொகையில் இப்பகுதிகளில் மண்டபங்கள் ஏதும் இல்லை என்பதால், நீண்ட தொலைவில் உள்ள மண்டபங்களில் தங்களது குடும்ப விழாக்களை அதிக பொருட்செலவில் நடத்தும் நிலை உள்ளது. எனவே, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சாரதி நகரில் சமுதாயக்கூடம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.78.80 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு:**

1) மதிப்பீட்டுத்தொகை ரூ.78,80,000/– க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை 2018-19ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **நகர்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்தல் (Urban Poor )** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.200.00 லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ3/5465/2018 (மையம்)**

**தீர்மானம் எண்.194 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட அரியமங்கலம் கோட்டம் வார்டு எண்.7க்குட்பட்ட விஸ்வாஸ்நகர் பகுதியில் பொதுமக்கள் அதிகளவு வசித்து வருகின்றனர். அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பொழுதுபோக்கவும் நடைபயிற்சி மேற்கொள்ளவும் பூங்கா ஏதும் அமைக்கப்படவில்லை. எனவே, விஸ்வாஸ் நகர் மனைப்பிரிவில் அமைந்துள்ள பூங்கா இடத்தில் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் நிறுவவும், பேவர் பிளாக் அமைத்தல், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பென்சிங், தண்ணீர் வசதி, மின்வசதி மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்தவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.24.70 லட்சத்திற்கு நிர்வாக அனுமதிக்காக தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மதிப்பீட்டுத்தொகை ரூ.24,70,000/– க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை 2018-19ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **இதர சாலைப்பணிகள் (சாலையோரங்களில் உடற்பயிற்சி கூடம் அமைத்தல் (3115)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.75.00 லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ3/5466/2018 (மையம்)**

**தீர்மானம் எண்.195 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், கீழ்கண்டுள்ள பணியினை பொதுநிதி **2017–18**ன் கீழ் மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.**402/2017–18**ன் வாயிலாக **25.04.2018** அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி

கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் விபரம்** | **வரப்பெற்றுள்ள ஒப்பந்துபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்)** | **குறிப்பு** |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| | **பொதுநிதி – 2017–18** | | |
| **1** | வார்டு எண்.44, பறவைகள் சாலை பகுதியில் நுண் உரம் தயாரிக்கும் கூடத்தில் அரவை இயந்திரம் இயக்குவதற்கான கட்டமைப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளுதல்<br><br>மதிப்பீடு ரூ.33.80 இலட்சம்.<br>இ1/1831/2018(மையம்) | **1. பி. வேலுச்சாமி**<br>**0.06 % குறைவு.**<br><br>2. சி. தனபால்,<br>1.94 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி. வேலுச்சாமி, ஒப்பந்தக்காரர் வழங்கியுள்ள மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகளை பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.

**(கோப்பு எண்.இ1/1831/2018(மையம்))**

**தீர்மானம் எண்.196 (பொருள்–4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் சத்திரம் பேருந்து நிலையம் மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி வளாக தரைத்தள கடைகளுக்கு மாமன்ற தீர்மானம் எண்.151, நாள்.30.07.2014ன் படி 100 சதுர அடிக்கு கீழ் அளவு கொண்ட கடைகளுக்கு மாத வாடகை ரூ.12,000/– எனவும், 100 சதுர அடிக்கு மேல் 115.60 சதுர அடி பரப்பளவு வரையிலான கடைகளுக்கு மாத வாடகை ரூ.15,000/– எனவும், பரப்பளவு 342.08 சதுர அடி அளவுள்ள கடைகளுக்கு மாத வாடகை ரூ.45,000/– எனவும் நிர்ணயம் செய்தும், ஏல முன் வைப்புத் தொகையாக ரூ.2,50,000/– என நிர்ணயம் செய்தும், மாத வாடகைக்கு பதிலாக திரும்ப வழங்க இயலாத மதிப்பு தொகைக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 116 சதுரடி பரப்பளவு வரையிலான கடைகளுக்கு ஆரம்பக்கேள்வித் தொகை ரூ.2,50,000/–எனவும், 342 சதுரடி பரப்பளவு வரையிலான கடைகளுக்கு ஆரம்பக்கேள்வித் தொகை ரூ.5,00,000/– எனவும் நிர்ணயம் செய்யப்பட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் மாமன்ற தீர்மானத்தின் படி திரும்ப வழங்கயியலாத மதிப்புத் தொகைக்கு 03.09.2014, 12.09.2014, 09.10.2014, 29.10.2014, 18.11.2014, 22.12.2014, 22.01.2015, 18.03.2015, 27.05.2015 மற்றும் 12.06.2015 ஆகிய தேதிகளில் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளாததால் நாளது தேதி வரை 31 கடைகள் ( கடை எண்.03, 04, 06, 07, 08, 09, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 24, 25, 26, 27, 28, 29, 30, 32, 34, 35, 36, 38, 39, 40 ) ஏலம் போகாமல் மாநகராட்சி கட்டுப்பாட்டியில் இருந்து வருகிறது.

மேற்கண்ட 31 கடைகளுக்கு திரும்ப வழங்கயியலாத மதிப்புத் தொகைக்கு மேற்கண்ட தேதிகளில் 10 முறை மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலம் / ஒப்பந்தப்புள்ளி போகாததால், மேற்படி கடைகளுக்கு மாதவாடகையை மறு நிர்ணயம் செய்து தரக்கோரி இளநிலை பொறியாளரிடம் கோரப்பட்டதில், இளநிலை பொறியாளரின் 19.09.2017ஆம் தேதிய குறிப்பின் படி மாத வாடகை சதுர அடிக்கு ரூ.44/— என நிர்ணயம் செய்தும் மாத வாடகைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் புதிய ஏல நிபந்தனைகளை வகுத்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர் அவர்களிடம் 23/02/2018ஆம் தேதி நேரில் பேசப்பட்டதில், மேற்படி மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் மாநகராட்சி பொறியியல் பிரிவு, சுகாதார பிரிவு, வருவாய் பிரிவு அமைத்து அதுபோக மீதம் உள்ள கடைகளை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இளநிலைபொறியாளரிடம் மேற்படி அலுவலகங்கள் அமைப்பதற்கு தேவையான கடைகளின் விபரம் மற்றும் காலியாக உள்ள கடைகளின் விபரத்தை தெரிவிக்குமாறு கோரப்பட்டதில் அலுவலக பயன்பாட்டிற்கும் மீதம் உள்ள கடைகளின் விபரப்பட்டியலை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| **அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கடைகளின் விபரம்:—** | **11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 24, 25, 26, 27, 28, 29, 30, 32 = 19 கடைகள்.** |
| **காலியாக உள்ள கடைகளின் விபரம்:—** | **3, 4, 6, 7, 8, 9, 34, 35, 36, 38, 39, 40 = 12 கடைகள்.** |

மேற்காணும் விபரப்படி அலுவலக பயன்பாட்டிற்கு போக மீதம் உள்ள 12 கடைகளுக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.44/— என நிர்ணயம் செய்தும், புதிய ஏல நிபந்தனைகளை வகுத்து மாத வாடகைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அ)** சத்திரம் பேருந்து நிலையம் மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி வளாக தரைத்தள கடை எண்கள்.11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 24, 25, 26, 27, 28, 29, 30, 32 = 19 கடைகளை மாநகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தி கொள்ளவும், மீதம் உள்ள கடை எண்கள். 3, 4, 6, 7, 8, 9, 34, 35, 36, 38, 39, 40 = 12 கடைகளுக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.44/— என நிர்ணயம் செய்து மாத வாடகைத் தொகைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** வைப்புத் தொகையாக ரூ.1,50,000/—என நிர்ணயம் செய்வதற்கும் மற்றும் உரிமம் வழங்கி கடையினை ஒப்படைப்பு செய்வதற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் நிர்ணயம் செய்யப்படும் தொகையினை உரிமம் பெற்றவர்கள் மாத வாடகை தொகையினை பிரதி மாதம் செலுத்தாமல் காலம் தாழ்த்தி வருவதாலும், மேலும் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படுவதாலும், மாநகராட்சி பெறும் நிதியிழப்பு ஏற்படுவதால் முன்கூட்டியே கூடுதல் முன்வைப்புத் தொகையாக 24 மாத வாடகைத் தொகையினை செலுத்துவதற்கும், அதன் பின் உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கும் அனுமதி வழங்கலாம்.

**இ)** பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான விண்ணப்ப படிவம் மற்றும் ஏல கையேடுகள் மொத்தம் 200 எண்ணிக்கைகள் அச்சடித்துக் கொள்வதற்கும், அதற்காகும் கட்டணத் தொகையினை செலவிடுவதற்கும் மற்றும் ஏல அறிவிப்பினை நாளிதழில்களில் விளம்பரம் செய்வதற்காகும் விளம்பர கட்டணத் தொகையினை செலவிடுவதற்கும் அனுமதி அளிக்கலாம்.

**அ1/8784/2013(ஸ்ரீ)**

**தீர்மானம் எண்.197 (பொருள்—5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சீர்மிகு நகரமாக (Smart City) தேர்வு செய்யப்பட்டுள்ளதின் பேரில் இத்திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சி கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்கு உட்பட்ட தில்லைநகர் 7வது குறுக்கு சாலையில் புதிதாக வணிக வளாகம் கட்டுவதற்கு ரூ.18.70 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. 16.05.2018 அன்று அரசு முதன்மை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தலைமையில் நடைபெற்ற சீர்மிகு நகர (Smart City) ஆய்வு கூட்டத்தில் மேற்படி திட்டத்தினை தனியார் நிறுவனம் மூலம் PPP முறையில் செயலாக்க பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

எனவே, கோ.அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.56, தில்லைநகர் 7வது குறுக்கு சாலையில் புதிதாக வணிக வளாகம் கட்டுவதற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்வதற்கும், இத்துறையில் அனுபவம் வாய்ந்த தனியார் நிறுவனங்கள் மூலம் PPP முறையில் செயலாக்க பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் சீர்மிகு நகர குழு (Smart City Committee)ன் நிர்வாக அனுமதி பெற்று EOI – ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அனுமதி வேண்டி கடிதம் அனுப்ப தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி (EOI) கோருவதற்கான அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கலாம்.

**இ2/5520/2018(மையம்)**

**தீர்மானம் எண்.198 (பொருள்–6) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**